தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

09.10.2012 P.M

10.10.2012 A.M

## காவிரி நீர் தமிழக மக்களின் வாழ்வாதாரம்: டி. ராஜா



காவிரிப் பிரச்னை தமிழக மக்களின் வாழ்வாதாரத்துக்கானப் பிரச்னை என்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி. ராஜா.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி தமிழகத்துக்கான உரிய அளவு நீரை மத்திய அரசுப் பெற்றுக் கொடுக்கக் கோரி திருவாரூரில் செவ்வாய்க்கிழமை ரயில் மறியல் போராட்ட த்தில் ஈடுபட்டபோது அவர் அளித்த பேட்டி:

காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் இன்னல்களைப் போக்கும் வகையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி காவிரியில் தேவையான தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். இது கர்நாடகத்துக்கும் மத்திய அரசுக்குமான போராட்டம் அல்ல. தமிழக மக்களின் வாழ் வாதாரத்துக்கான போராட்டம்.

தமிழகத்துக்கு உரிய பங்கீட்டு நீரை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும். காவிரி பிரச்னைக் குறித்து நாடாளுமன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் குரலெழுப்பப்படும்.

கர்நாடக அரசியல் கட்சித் தலைவர்கள் பிரதமரை சந்தித்து முறையிடுவதுபோல, தமிழகத் தலைவர்களும் முறையிட்டுப் போராட்டம் நடத்தினால் இந்திய இறையாண்மை பாதிக்கப்படும்.

பக்ராநங்கல் அணைத் திட்டத்தின்போது விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் காவிரி நதிக்கு இன்னமும் அதுபோன்ற விதிமுறைகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. கர்நாடகம் தமிழகத்துக்கு திறந்து விடும் தண்ணீரை நிறுத்தினால், உடனடியாக மத்திய அரசு தலையிட்டு தண்ணீரை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

காவிரிப் பிரச்னையில் தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து போராட வேண்டும்.

தமிழக மக்களின் நிலையை உணர்ந்து அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம் நடத்துகிறது என்றார் ராஜா.

## இன்றும் மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுவையில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

தமிழகத்தில் பதிவான மழை (செவ்வாய்க்கிழமை காலை 8.30 நிலவரம் - செ.மீ.): ஈரோடு - 13, பஞ்செட்டி, தோகைமலை - 9, சின்னக்கல்லாறு, பரமத்தி வேலூர் - 6, துறையூர், வால்பாறை, கோபிசெட்டிப்பாளையம், அறந்தாங்கி, பாலக்கோடு - 5, குழித்துறை, நாமக்கல், அஞ்செட்டி - 4, புள்ளம்பாடி, குமாரபாளையம், தேன்கனிக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர், திருப்பத்தூர், மேல் ஆலத்தூர் - 3, மேட்டுப்பாளையம், கோவை, முசிறி, மணப்பாறை, ஓமலூர், ராயக்கோட்டை, ஆண்டிப்பட்டி, குளித்தலை, திருத்துறைபூண்டி, மேட்டூர், குடியாத்தம் - 2, மருங்காபுரி, சமயபுரம், திருச்சி, உத்தமபாளையம், சேலம், வாழப்பாடி, ஏற்காடு, சிவகிரி, குன்னூர், தருமபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, இளையாங்குடி, ராசிபுரம், மணியாச்சி, திருவையாறு, திண்டுக்கல், போச்சம்பள்ளி, பெருந்துறை, கொடுமுடி - 1.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது



சேலம் மாவட்டம், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு செவ்வாய்க்கிழமை வினாடிக்கு 12 ஆயிரம் கன அடியாக குறைந்தது.

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்ததால் ஞாயிற்றுக்கிழமை வினாடிக்கு 10 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து அன்று மாலையில் 29,926 கன அடியாக உயர்ந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்தது.

இந்த நிலையில், திங்கள்கிழமை இரவு முதல் கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. மேட்டூர் அணையின் சுற்றுப் பகுதிகளில் மழை இல்லாததாலும் அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் குறைந்துள்ளது. திங்கள்கிழமை மாலை வினாடிக்கு 16,265 கன அடியாக இருந்த நீர்வரத்து, செவ்வாய்க்கிழமை மாலை 12,427 கன அடியாக குறைந்தது.

இதற்கிடையே நீர் மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு சரி செய்யப்பட்டதை அடுத்து செவ்வாய்க்கிழமை முதல் காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 18,399 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. அணைக்கு வரும் தண்ணீரின் அளவைக் காட்டிலும் பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு சுமார் 6 ஆயிரம் கன அடி அதிகம். இதனால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக குறையத் தொடங்கியுள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து நீர் திறக்கப்படாததால் மேட்டூருக்கு வரும் நீரின் அளவு புதன்கிழமையில் இருந்து மேலும் குறையத் தொடங்கும். தற்போது 71 அடியாக உள்ள அணையின் நீர்மட்டம் சில நாள்களில் 60 அடிக்கும் கீழ் செல்லும் நிலை உருவாகும்.

நீரின் அளவை தெரிவிக்க மறுப்பு: இதற்கிடையே கர்நாடகத்தின் கே.ஆர்.எஸ்., கபினி உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம், அங்கிருந்து திறக்கப்படும் நீரின் அளவு போன்ற விவரங்கள் மேட்டூர் பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு இரண்டாவது நாளாகத் தெரிவிக்கப்படவில்லை. கர்நாடக அணைகளின் நிலவரம் பெங்களூரில் உள்ள தமிழக பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு தினசரி தெரிவிக்கப்படும். அங்கிருந்து சென்னைக்கு பரிமாறப்படும் தகவல், மேட்டூரில் உள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

காவிரி பிரச்னை தொடர்பாக, கர்நாடக மாநிலத்தில் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில் அந்த மாநில அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

## மூலப் பொருள்கள் விலையேற்றம், கடும் மின் வெட்டு:முட்டை அட்டைப் பெட்டி தொழில் பாதிப்பு

இந்திய முட்டைகளுக்கு ஓமன் நாட்டில் தடை விலக்கப்பட்டு, ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்துள்ளபோதிலும் முட்டைகளுக்கான அட்டைப் பெட்டிகள் தயாரிப்புத் தொழில் பாதிப்படைந்துள்ளது. மூலப்பொருள்கள் விலையேற்றம், கடுமையான மின் வெட்டு, தொழிலாளர் பற்றாக்குறையே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

தேசிய அளவில் கோழி முட்டை உற்பத்தியில் தனி இடத்தைப் பிடித்துள்ள நாமக்கல் மண்டலத்தில் (சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர்) சராசரியாக தினசரி சுமார் 3.2 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சுமார் 50 லட்சம் முதல் 70 லட்சம் முட்டைகள் வரை பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. பறவைக் காய்ச்சல் பீதியை அடுத்து, 2012 மார்ச் 27-ம் தேதி முதல் ஓமன் நாட்டில் இந்திய முட்டைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை கடந்த செப்டம்பர் 19-ம் தேதியுடன் விலக்கிக் கொள்ளப்பட்டது. கால்நடை மற்றும் விவசாயப் பண்ணை வர்த்தகர்கள் சங்கத்தின் (எல்ஐஎஃப்டி) வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையால் இந்தத் தடையை ஓமன் அரசு விலக்கிக் கொண்டது. இதையடுத்து, செப்டம்பர் 24 முதல் நாமக்கல் மண்டலத்திலிருந்து ஓமன் நாட்டுக்கு தினசரி 20 லட்சத்துக்கும் அதிகமான முட்டைகள் ஏற்றுமதியாகின்றன. மேலும், ஆப்கானிஸ்தான், ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கும் தினமும் 35 லட்சம் முட்டைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அதன்படி, நாமக்கல் மண்டல முட்டை வர்த்தகத்துக்கு முக்கியச் சந்தையாக விளங்கும் ஓமன் நாட்டுக்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்துள்ளதால், முட்டை வர்த்தகத்தின் சார்புத் தொழிலான அட்டைப் பெட்டி தயாரிப்புத் தொழில் சூடுபிடித்துள்ளது.

எனினும், மூலப்பொருள்கள் விலையேற்றம், தொழிலாளர்கள் பற்றாக்குறை பிரச்னைக்கு மத்தியில் கடுமையான மின் வெட்டு காரணமாக முட்டைகளுக்கான அட்டைப் பெட்டித் தொழிலுக்கு தொடர்ந்து பாதிப்புகள் ஏற்பட்டு வருவதாக அதன் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாமக்கல் மண்டலத்தில் சுமார் 10 நிறுவனங்கள் முட்டைகளுக்கான அட்டைப் பெட்டி தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. நாள்தோறும் 5 லட்சம் முதல் 8 லட்சம் அட்டைப் பெட்டிகள் தயாரிக்கும் இந்த நிறுவனங்கள் மூலம் 300-க்கும் மேற்பட்டோர் நேரடி வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். அட்டைப் பெட்டி தயாரிப்பதற்கான காகிதம், பசை, பின் உள்ளிட்ட மூலப்பொருள்களின் விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் 35 சதம் உயர்ந்துள்ளது. தவிர, போக்குவரத்துச் செலவு, தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, மின் கட்டண உயர்வு போன்றவற்றால் 360

முட்டைகளுக்கான ஒரு பெட்டியின் உற்பத்திச் செலவு 40 சதம் உயர்ந்துள்ளது. எனினும், தொழில் போட்டி காரணமாக, அட்டைப் பெட்டிகளின் விலையை குறிப்பிட்ட அளவுக்கு மேல் உயர்த்த முடியாத சூழல் நிலவுகிறது என்கிறார் நாமக்கல் அட்டைப் பெட்டி உற்பத்தி நிறுவன மேலாளர் ராஜேந்திரன்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

14 மணி நேரத்துக்கு மேலாக தடை செய்யப்படும் மின்சாரம் காரணமாக அட்டைப்பெட்டித் தயாரிப்புப் பணி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், குறிப்பிட்ட நேரத்தில் அட்டைப் பெட்டிகளைத் தயாரிக்க முடியாமல் ஆர்டர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு பிரிந்துவிட்டன. இதனால், முட்டை ஏற்றுமதி அதிகரித்த போதிலும், அதன் பலன் அட்டைப் பெட்டி தயாரிப்போருக்கு கிடைக்காத சூழல் நிலவுகிறது என்றார் அவர்.

இதுகுறித்து முட்டை ஏற்றுமதி நிறுவன மேலாளர் சண்முகம் கூறியது:

மூலப்பொருள்கள் விலை உயர்வு, தொடர் மின் வெட்டு காரணமாக முட்டை அட்டைப் பெட்டி விலை (360 முட்டைகளுக்கான ஒரு பெட்டி) ரூ.36-லிருந்து ரூ.52-ஆக உயர்ந்து ள்ளது. இந்த விலையுயர்வை முட்டை விலையில் சேர்த்தால் இந்திய முட்டை ஏற்றுமதி வர்த்தகத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும். எனினும், தொடர்ந்து அந்தச் செலவினங்களின் உயர்வை முட்டை விலையில் சேர்க்காமலும் தொடர முடியாது என்றார் அவர்.

எனவே, அட்டைப் பெட்டிகளுக்கான மூலப்பொருள்கள் விலை உயர்வை கட்டுப்படுத்தவும், குடிசைத் தொழில்போல் இயங்கும் அட்டைப் பெட்டித் தொழிலுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அட்டைப்பெட்டி உற்பத்தியாளர்களின் எதிர்பார்ப்பு.

## விதியே... விதியே...!

காவிரி நதிநீர் ஆணையத்தின் உத்தரவுப்படி தமிழ்நாட்டுக்குத் திறந்துவிடப்படும் (வினாடிக்கு 9,000 கனஅடி) நீரின் அளவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய கர்நாடகத்தின் கோரிக்கையை, நீதிமன்றமும் பிரதமரும் நிராகரித்த அதே நாளில், கிருஷ்ணராஜ சாகர் அணையிலிருந்து திறந்து விட்டுக்கொண்டிருந்த, வினாடிக்கு 9,823 கனஅடி தண்ணீரை நிறுத்தியுள்ளது கர்நாடக அரசு!

இச்செயல் நீதிமன்றத்தையும், காவிரி நதிநீர் ஆணையத்தையும் ஒருசேர அவமதிக்கும் செயல் என்று மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தும் கர்நாடக அரசு இந்த அளவுக்குத் துணிந்திருக்கிறது என்றால் அந்த தைரியம் எங்கிருந்து வந்தது? இச்செயலை முன்வைத்து ஆட்சியைக் கலைக்கலாம், அணையை மத்திய அரசு தன்பொறுப்பில் எடுத்துக்கொள்ளலாம் என்கிற அச்ச உணர்வே இல்லாமல் அடாவடி நடவடிக்கையில் கர்நாடக அரசு இறங்கியது ஏன்?

"இது பிரதமர் என்ற நிலையில் அளிக்கப்பட்ட உத்தரவு அல்ல, உடனே மாற்றுவதற்கு; காவிரி நதிநீர் ஆணையத்தின் உத்தரவு. அக்டோபர் 11-ஆம் தேதி மீண்டும் கூடும்போது, இதுகுறித்துப் பேசுவோம், நிலைமைகளை ஆராய்ந்து முடிவு எடுப்போம்' என்கிறார் பிரதமர் மன்மோகன் சிங்.

"காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டியவர் அதன் தலைவர்தான். உச்ச நீதிமன்றம் அல்ல; அவரது உத்தரவுக்கு நீதிமன்றம் இடையூறாக இருக்காது' என்று உச்ச நீதிமன்றமும் தெளிவாகக் கூறியதுடன், காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்துக்கு மறுநாள் (அக்டோபர் 12-ஆம் தேதிக்கு) இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாகத் தெரிவித்தது.

அக்டோபர் 11-ஆம் தேதிக்கு மூன்று நாள்களே உள்ள நிலையில், ஏன் கிருஷ்ணராஜ சாகர் அணையிலிருந்து தமிழகத்துக்குத் தண்ணீர் விடுவதை நிறுத்த வேண்டும்?

கர்நாடக விவசாயிகளுக்கே தண்ணீர் இல்லை என்று காரணம்காட்டித் தங்கள் செயலைக் கர்நாடக அரசு நியாயப்படுத்தவே முடியாது. அக்டோபர் 8-ஆம் தேதி மாலை நிலவரப்படி, கிருஷ்ணராஜ சாகர் அணையில் 104.92 அடி தண்ணீர் இருந்தது. (மொத்த உயரம் 124.8 அடி). கபினி அணையில் (கடல்மட்டத்திலிருந்து) 2268.50 அடிக்கு தண்ணீர் இருந்தது. மொத்த உயரம் 2284 அடி. ஆனால், அதே நேரத்தில் தமிழ்நாட்டில் மேட்டூர் அணையின் நீர் மட்டம் 72.05 அடியாகத்தான் இருந்தது. கடந்த ஒரு மாதமாக இந்த உயரத்துக்கு மேலாக நீர்மட்டம் உயரவே இல்லை.

அக்டோபர் 8-ஆம் தேதி, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 16,000 கனஅடி வந்து கொண்டிருந்ததற்குக் காரணம், பருவமழையால் வந்த மிகைநீர். மழை நின்றவுடன் இந்த நீர்வரத்தும் நின்றுபோகும். மேட்டூர் அணையின் நீர் மட்டம் இந்தப் பருவமழையால் ஒரே நாளில் 100 அடிக்கு உயர்ந்துவிடும் என்பதுபோல கர்நாடக அரசு சொல்வதும் உண்மையல்ல.

கர்நாடக அணைகளில் தண்ணீர் இருக்கிறது. ஆனால் அது தனக்கு மட்டுமே சொந்தம் என்ற மனநிலையில், இத்தனை தைரியத்துடன், பிரதமர் ஆணையை மீறி, தண்ணீரை நிறுத்தக் காரணம், அங்குள்ள அரசியல் கட்சிகளும் கன்னட அமைப்புகளும் மட்டுமே!

கர்நாடக ஆளும் கட்சியான பாஜக தலைவர்கள் 16 பேர் குழுவாகச் சென்று பிரதமரைச் சந்திக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மாநிலத்தின் முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர், தான் பாஜக கட்சி என்பதைப் பொருட்படுத்தாமல், காங்கிரஸ் கட்சித் தலைவரான மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்திக்கிறார். மல்லிகார்ஜுன கார்கேயும் கிருஷ்ணாவும் கர்நாடக காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் பிரதமரைச் சந்தித்து தமிழகத்துக்கு தண்ணீர் விடுவதை நிறுத்துங்கள் என்று வலியுறுத்துகிறார்கள்.

அதேவேளையில், இங்கே தமிழக அரசியல் கட்சிகள் என்ன செய்துகொண்டிருக்கின்றன? ஆளும்கட்சி அதிமுக தனித்துவிடப்பட்டுள்ளது. புதுதில்லியில் அதன் குரலுக்கு வலு இல்லை. மற்றபடி, தமிழகத்தைச் சேர்ந்த வேட்டி கட்டிய மத்திய அமைச்சர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள திமுக அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள்?

கர்நாடக அரசியல் கட்சிகள் பிரதமரைச் சந்தித்தால் அவர்களும் தமிழகத்தின் பிரதிநிதிகளாகச் சென்று, எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டாமா? ஆளும் அதிமுகவுக்கு கெட்டபெயர் வரட்டும் என்று வாளாவிருப்பார்கள் என்றால், கர்நாடகம் எப்படி தமிழ்நாட்டை மதிக்கும்? தண்ணீரைத் திறந்துவிடும்?

கர்நாடகத்தில் காங்கிரஸ் அல்லது பாஜக இரு கூட்டணிகளைத் தவிர வேறு கட்சி ஆட்சி வருவது அரிது; விரைவில் கர்நாடக மாநிலத்தில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால், மக்களைச் சந்திக்க ஏதுவாக இத்தகைய நாடகங்களை நடத்துவதாகச் சொல்லலாம். அந்த வாதம் உண்மையாகவே இருப்பினும்கூட, காவிரிப் பிரச்னையில் மக்களைச் சந்தித்தாக வேண்டும் என்ற எண்ணம், அங்குள்ள பாஜக, காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் ஆகியோருக்கு இருப்பதைப்போல, ஏன் தமிழக காங்கிரஸுக்கும், திமுகவுக்கும் இல்லை?

ஏனென்றால், "காவிரிப் பிரச்னையில் அதிமுக ஒன்றும் செய்யவில்லை என்பது கிடக்கட்டும், மத்திய அரசில் ஆட்சிச் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருந்த நீங்கள் செய்தது என்ன?" என்று காங்கிரஸையும், திமுகவையும் கேள்வி கேட்கும் தமிழன் தமிழ்நாட்டில் இல்லை.

மாநிலத்தில் ஆட்சிசெய்தபோதும், மத்திய அரசில் இடம்பெற்ற போதும் அரசியல் சுயலாபத்துக்காகத் தமிழனை பலவீனப்படுத்தி, கர்நாடகமும், கேரளமும் நம்மை ஏளனம் செய்யும் நிலைக்கு ஆளாக்கிய அரசியல் கட்சிகளைத் தட்டிக் கேட்கத் துணிவில்லாத தமிழன்தான் தமிழ்நாட்டுக்கு எதிரி.

மூத்த அமைச்சர்களான எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கும், மல்லிகார்ஜுன கார்கேவுக்கும் உள்ள உணர்வு, ப. சிதம்பரத்துக்கும், ஜி.கே. வாசனுக்கும், ஜெயந்தி நடராஜனுக்கும், திமுக தலைவரின் மூத்த வாரிசு மு.க. அழகிரிக்கும், ஏனைய திமுக அமைச்சர்களுக்கும் ஏன் இல்லை? இவர்களைத் தேர்ந்தெடுத்த நம்மை நாமே நொந்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

கர்நாடகத்தில் அரசியல்சட்டப் பிரிவு 356-ஐ பிரயோகித்து அரசைக் கலைத்திட வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டுள்ள திமுக தலைவர் கருணாநிதிக்கு நன்றாகத் தெரியும், அதை மத்திய அரசை ஆளும் கூட்டணியினால் செய்ய முடியாது என்பதும், அப்படிச் செய்தால் அது காங்கிரஸ்க்கு எதிராக அங்கே பாஜகவைப் பலப்படுத்திவிடும் என்பதும் மற்ற கட்சிகள் எதிர்க்கும் என்பதும்! நாளை யாரும் திமுகவைக் குறை சொல்லக்கூடாது என்பதற்காக ஒரு காகித ஓடத்தை வறண்ட காவிரியில் விடுகிறார் திமுக தலைவர் கருணாநிதி.

தமிழகம் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சொல்லப்படும் தீர்ப்பினால் நன்மை ஏற்படலாமே தவிர, தமிழக அரசியல் கட்சிகளால் தமிழனுக்கு நன்மை கிடைக்காது.

அன்று மகாகவி பாரதி இந்த நடிப்பு சுதேசிகளுக்காகத்தான் "நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி வஞ்சனை செய்வாரடீ, கிளியே, வாய்ச்சொல்லில் வீரரடி...!' என்று பாடினான் போலிருக்கிறது!

9th oct 2012 P.M

## துவரை சாகுபடியில் நாற்றுவிட்டு நடும் புதிய முறை



கோபிசெட்டி பாளையத்தில் துவரை சாகுபடியில் நாற்றுவிட்டு நடும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலமாக, ஏக்கருக்கு ரூ.1 லட்சம் லாபம் ஈட்டலாம்.

கோபி வட்டாரத்தில் மானாவாரி மற்றும் வரப்புப் பகுதியில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. துவரை விதையை நேரடியாக ஊன்றுவது வழக்கம். இப்போது, நெற்பயிரைப் போல், நாற்றுவிட்டு நடவு செய்யும் முறை அறிமுகமாகி உள்ளது.

**கோபி வேளாண் உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கூறியதாவது:**பொதுவாக, பயறு வகைகளை நாற்றாக நடும் பழக்கம் இல்லை. துவரை போன்ற பயறுகளை, நாற்றுவிட்டு நடும் போது அதிக மகசூல் கிடைப்பது ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இத் திட்டத்துக்காக தமிழக அரசு, ஹெக்டேருக்கு ரூ. 7,500 மானியம் வழங்குகிறது.

ஈரோடு மாவட்டத்தில் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை ஆடிப்பட்டம், செப்டம்பர் முதல் நவம்பர் வரை புரட்டாசிப் பட்டம் என இரண்டு பட்டங்களில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. நாற்று விட்டு நட 130 நாள்கள் வயதுள்ள கோ.ஆர்.ஜி-7 என்ற துவரை ரகம் புரட்டாசி பட்டத்துக்கு ஏற்றது. ஏக்கருக்கு ஒரு கிலோ தேவைப்படும். மணல், மண் மற்றும் எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து 5 அங்குலத்துக்கு மூன்று அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் நிரப்ப வேண்டும். ஒரு பாலித்தீன் பைக்கு ஒரு விதை என்ற வீதத்தில் விதைக்க வேண்டும்.

விதைத்த எட்டாவது நாள் முளைத்துவரத் துவங்கும். 15-வது நாள் நன்கு முளைத்துவிடும். 20-வது நாள் களையெடுக்க வேண்டும். துவரை நாற்றங்காலை நிழற்பாங்கான இடத்தில் அமைப்பது அவசியம். தினசரி பூவாளி கொண்டு நீர் தெளிக்க வேண்டும். விதைத்த 30-வது நாள், நடவு செய்ய நாற்றுகள் தயார் நிலைக்கு வரும்.

துவரை நடவுக்கு மூன்று வாரங்களுக்கு முன், நன்கு மக்கிய ஐந்து டன் எரு அல்லது 2.5 டன் மண் புழு உரம் இடவேண்டும். வரிசைக்கு வரிசை, ஐந்து அடிக்கு மூன்று அடி என்ற இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். வாழை சாகுபடி செய்யும்போது ஊடுபயிராகவும் சாகுபடி செய்யலாம்.

காய்கள் 80 சதவீதம் முதிர்ச்சி அடைந்தவுடன், செடிகளை அறுத்து, கட்டிவைத்து, பின்னர் வயலில் காயவைக்க வேண்டும். பிரித்தெடுக்கப்படும் விதைகளை 10 சதவீத ஈரப்பதம் வரும் வரை காயவைக்க வேண்டும். சாதாரணமாக நேரடியாக துவரை விதைப்பதால் ஏக்கருக்கு 300 கிலோ மகசூல் கிடைக்கிறது. நாற்றுவிட்டு நடவு செய்வதால் ஏக்கருக்கு 1,000 கிலோ வரை கிடைக்கிறது. ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து பச்சை துவரைக்காய் பெங்களூருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதேபோல, ஈரோடு மாவட்டத்திலும் உற்பத்தி அதிகரிக்கும்போது வெளி மாநிலத்திற்கு அனுப்பி வைக்கலாம். இதன்மூலமாக அதிக லாபம் பெறலாம் என்றார்.

## குன்னூரில் திடீர் மழையால் விசாயிகள் மகிழ்ச்சி

குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் திடீரென திங்கள்கிழமை மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த 3 மாதங்களாக குன்னூரில் மழை பெய்யவே இல்லை. இதனால் அப் பகுதியில் கடும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தேயிலை மற்றும் காய்கறி விவசாயத்துக்கு போதுமான நீர் கிடைக்கவில்லை. பயிர்களின் மகசூல் வெகுவாகக் குறைந்துவிட்டதாக விவசாயிகள் கவலையடைந்தனர். இந் நிலையில், திங்கள்கிழமை மாலை திடீரென பெய்த மழை, சுமார் 1 மணிநேரம் வரை நீடித்தது. இதனால் விவசாயத்துக்கு தேவையான நீர்ப்பாசனம் ஓரளவிற்கு கிடைத்து இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கீழ்குந்தா, குந்தா விவசாயிகளுக்கு அன்னவாரி சான்றிதழ் வழங்க காங்கிரஸ் கோரிக்கை

கீழ்குந்தா பேரூராட்சி, குந்தா ஊராட்சிப் பகுதிகளில் கடும் வறட்சி நிலவுவதால், இப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அன்னவாரி சான்றிதழ் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சி மாவட்ட துணைத் தலைவர் நீலகிரி வாசுதேவன் மாவட்ட ஆட்சியருக்கு திங்கள்கிழமை அனுப்பியுள்ள கோரிக்கை மனு விவரம்:
கீழ்குந்தா பேரூராட்சி, குந்தா ஊராட்சியில் சிறு, குறு தேயிலை விவசாயிகள் வாழ்ந்து வருகின்றனர். கடந்த 10 மாத காலமாக, மேற்கண்ட பகுதிகளில் மழை பெய்யாததால், தேயிலை விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளும், விவசாயக் கூலித்தொழிலாளர்களும் வேலை வாய்ப்பை இழந்து, வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிண்ணக்கொரை, மஞ்சூர் கூட்டுறவு தேயிலை ஆலைகளின் கடந்த ஆண்டு பசுந்தேயிலை வரத்துடன் நடப்பாண்டு வரத்தை ஒப்பிட்டு பார்த்தாலே மழை பொய்த்ததால் ஏற்ப்பட்டுள்ள பாதிப்பு தெரிந்துவிடும்.
வாழ்வாதாரம் தேடி விவசாயிகளும், கூலித் தொழிலாளர்களும் வேறு மாவட்டங்களுக்கு குடி பெயர்வது அதிகரித்து வருகிறது.

இதனால் கிராமங்களின் பொருளாதாரம் நிலைகுலைந்துள்ளது. எனவே விவசாயத்தின் நலன் கருதி கீழ்குந்தா பேரூராட்சி, குந்தா ஊராட்சி பகுதிகளில் வசிக்கும் விவசாயிகளுக்கு அன்னவாரி சான்றிதழ் வழங்க வேண்டும்.
மேலும், அவர்களின் நிலை மேம்பட கூட்டுறவு வங்கிகளில் பெற்றிருக்கும் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்து, புதிய கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குமரி மாவட்டத்தில் மிதமான மழை

கன்னியாகுமரி மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலமாக இடி-மின்னலுடன் மிதமான மழை பெய்தது.

மாவட்டத்தில் கடந்த 6 மாதமாக மழை இல்லை. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது. அனல் காற்று தொடர்ந்து வீசி வந்தது.

இந்நிலையில் திங்கள்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. 2 மணிக்கு இடி மின்னலுடன் மிதமான மழை பெய்தது. சுமார் 30 நிமிடங்கள் வரை இந்த மழை நீடித்தது. மழை பெய்ததைத் தொடர்ந்து வெப்பக்காற்று தணிந்து இதமான காற்று வீசி வருகிறது.

களியக்காவிளை: களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்தது.

களியக்காவிளையில் சில நாள்களாக பகலில் கடும் வெயில் காணப்பட்டது. திங்கள்கிழமையும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

இந்நிலையில் பிற்பகலில் வானம் மேகமூட்டமானது. பிற்பகல் 3 மணிக்கு மேல் மிதமான மழை பெய்தது. சிறிது நேரத்துக்குப் பின் பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து வெயிலின் தாக்கம் குறைந்து, வானம் மேகமூட்டமாக காணப்பட்டது.

களியக்காவிளை, வன்னியகோடு, கோழிவிளை, படந்தாலுமூடு, மடிச்சல் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.

## தருமபுரி மாவட்டத்தில் பரவலாக மழை

தருமபுரி மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்தது. இதனால், சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

தருமபுரி மாவட்டத்தில் சில நாள்களாக பகலில் வழக்கத்துக்கு மாறாக வெப்பம் அதிகமாக உணரப்பட்டது. பகலில் வெப்பம் அதிகமாக இருந்தாலும், மாலையில் மேக மூட்டம் காணப்பட்டதால் வெப்பம் தணிந்து, குளிர்ந்த காற்று வீசியது.

பருவ மழை தவறியதால், விவசாய கிணறுகள் வற்றின. ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. இதனால், கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் ஏற்பட்டது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தருமபுரி மாவட்டம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்தது. ஒகேனக்கல் உள்பட காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

தருமபுரியில் திங்கள்கிழமை மாலை 5.30 மணியளவில் இடியுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழை சுமார் அரை மணி நேரம் நீடித்தது.

பலத்த மழையால் தருமபுரி நகரில் கழிவுநீர் கால்வாய்களிலும், சாலைகளிலும் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. சாலைகளில் உள்ள பள்ளங்களில் மழை நீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர்.

பணி முடிந்து வீடு திரும்பிய பெண்கள், மாணவர்கள் மழையில் நனைந்தபடியே செல்வதைக் காண முடிந்தது.

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, புலிகரை, தருமபுரி, காரிமங்கலம், கம்பைநல்லூர், நல்லம்பள்ளி, தொப்பூர் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்தது.


தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

10.10.2012 A.M

விவசாய மலர் செய்தி

## பதப்படுத்தப்பட்ட முந்திரி இறக்குமதியால் உள்நாட்டு தொழில் பாதிப்பு



இந்திய நிறுவனங்கள், வெளிநாடுகளில் இருந்து, உடைந்த மற்றும் சிறு துண்டுகளான, முந்திரி வகைகளை குறைந்த விலையில் இறக்குமதி செய்து கொள்கின்றன. இதனால், உள்நாட்டில் முந்திரி பதப்படுத்தும் தொழில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இவ்வாறு உடைக்கப்பட்ட முந்திரி வகைகளின் மதிப்பை குறைத்துக் காட்டி இறக்குமதி செய்வதால், மத்திய அரசுக்கும் வரி வருவாயில் இழப்பு ஏற்படுவதாக, இந்திய முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு குழு (சி.இ.பி.சி.ஐ.,) தெரிவித்துள்ளது.

**வியட்னாம்:**சென்ற, 2011ம் ஆண்டு ஏப்ரல் முதல், நடப்பு, 2012ம் ஆண்டு பிப்ரவரி வரை, வியட்னாம் மற்றும் பிரேசில் நாடுகளில் இருந்து, மதிப்பை குறைத்துக் காட்டி, 2,000 டன் முந்திரி வகைகள் (உடைந்த மற்றும் சிறுதுண்டுகளான), இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவற்றில், நவிமும்பையில் உள்ள, நவ சேவா துறைமுகம் வாயிலாக, 10.24 கோடி ரூபாய் மதிப்பிலான, 818 டன் முந்திரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவை, ஒரு கிலோ 125.32 ரூபாய் என்ற சராசரி மதிப்பில், இறக்குமதியாகி உள்ளன.ஆனால், தரம் மற்றும் வகைகளின் அடிப்படையில், இவற்றின் அசல் விலை, 200 ரூபாயில் இருந்து, 500 ரூபாயாக உள்ளது என, சி.இ.பி.சி.ஐ., அமைப்பை சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**மதிப்பு:**இது குறித்து சி.இ.பி.சி.ஐ., செயல் இயக்குனரும், செயலருமான சசி வர்மா கூறிய தாவது: சென்ற நிதியாண்டில், மிக அதிக அளவில், உடைந்த மற்றும் சிறு துண்டுகளான முந்திரி வகைகள், மதிப்பை குறைத்து காட்டி இறக்குமதி செய்யப்பட்டு உள்ளன. இவற்றின் போட்டியை சமாளிக்க முடியாமல், உள்நாட்டில், முந்திரி பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

முந்திரி வகைகளுக்கு, 36.9 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது. சென்னை மற்றும் மும்பை துறைமுகங்கள் வழியாகவும் அதிக அளவில், இது போன்ற முந்திரி வகைகள், மதிப்பை குறைத்து காட்டி, இறக்குமதி செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

இது குறித்து மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுங்கத் துறை மற்றும் அன்னிய வர்த்தக தலைமை இயக்குனரகம், கண்காணிப்பை தீவிரப்படுத்தி, ஒன்று அல்லது இரண்டு துறைமுகங்கள் வழியாக மட்டுமே, முந்திரி இறக்குமதிக்கு அனுமதி அளிக்க வேண்டும்.

**தூத்துக்குடி:**இதன்படி, தூத்துக்குடி மற்றும் கொச்சி துறைமுகங்களுக்கு மட்டும் அனுமதி அளிக்க வேண்டும் என, பரிந்துரைத்துள்ளோம். ஏனெனில், பல துறைமுகங்களில் உள்ள சுங்கத் துறை அதிகாரிகளுக்கு, முந்திரி வகைகளை இனம் காண தெரியவில்லை என, சசி வர்மா மேலும் கூறினார்.வியட்னாமில், உடைந்த மற்றும் சிறு துண்டுகளான முந்திரி வகைகள் பயன்பாடு அதிக அளவிற்கு இல்லை. இந்நாடு, அமெரிக்காவிற்கு அதிக அளவில் முழு முந்திரியை ஏற்றுமதி செய்துவருகிறது.

ஆனால், உடைந்த மற்றும் சிறு துண்டுகளான முந்திரி வகைகளை, அமெரிக்கா இறக்குமதி செய்வதில்லை. இதனால், மிகப் பெரும் சந்தையை கொண்ட இந்தியாவிற்கு, இவ்வகை முந்திரியை, வியட்னாம், அதிக அளவில் ஏற்றுமதி செய்து வருகிறது.இது, உள்நாட்டு முந்திரி பதப்படுத்தும் தொழிலை பாதிப்பதாக உள்ளது. குறிப்பாக, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள, கிராமப் புறங்களை சேர்ந்த லட்சக்கணக்கான பெண்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.கால்நடை தீவனம் என்ற பெயரிலும், உடைந்த முந்திரி வகைகள் இறக்குமதி செய்யப்படுவதாக, சசி வர்மாதெரிவித்தார்.

**உற்பத்தி:**இந்தியாவில், ஆண்டுக்கு, 6.50 லட்சம் டன் முந்திரிக்கொட்டை உற்பத்தியாகிறது. இது தவிர, இறக்குமதி செய்யப்படும் 7 லட்சம் டன் முந்திரிக் கொட்டையில் இருந்து, முந்திரி பருப்பு பிரித்தெடுக்கப்படுகிறது.சென்ற, 2011-12ம் நிதியாண்டில், இந்தியாவில் இருந்து, 4,400 கோடி ரூபாய் மதிப்பிலான, 1.30 லட்சம் டன் முந்திரி வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதே

காலத்தில், உள்நாட்டில், 5,000 கோடி ரூபாய் மதிப்பிலான, 1.50 லட்சம் டன் முந்திரி பயன்படுத்தப்பட்டுள்ளது.

## கடந்த ஆண்டை காட்டிலும்... "உணவு தானிய உற்பத்தி குறையும்'



புதுடில்லி:நடப்பு 2012-13ம் பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்), உணவு தானிய உற்பத்தி, சென்ற பயிர் பருவத் தின் சாதனை அளவான, 25.74 கோடி டன்னைக் காட்டிலும் சரிவடையும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.

**வறட்சி:**நாட்டின் சில பகுதிகளில் தாமதமான மழை பொழிவு, வறட்சி போன்ற வற்றால், உணவு தானிய உற்பத்தி சீரற்ற நிலையில் உள்ளது.குறிப்பாக, கர்நாடகா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்க ளில், 360க்கும் மேற்பட்ட தாலுகாக்களில், அண்மையில் முடிவடைந்த கரீப் பருவத்தில், உணவு தானிய உற்பத்தி, 10 சதவீதம் சரிவடைந்து, 11.72 கோடி டன்னாக குறையும் என, வேளாண் அமைச்சகம் மதிப்பீடு செய்துள்ளது.

ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில், மழைபொழிவு நல்ல அளவில் இருந்தது. இது, ரபி பருவ உணவு தானிய உற்பத்திக்கு ஏற்ற சூழலை உருவாக்கியுள்ளது.தொடர்ந்து, இரண்டு ஆண்டுகளாக நாட்டின் உணவு தானிய உற்பத்தி, சாதனை அளவை எட்டியுள்ளது. இதையடுத்து, ஒரு கோடி டன் அரிசி, தலா 25 லட்சம் டன் சர்க்கரை மற்றும் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளன.மத்திய கிடங்குகளில், உணவு தானிய சேமிப்பு ஏழு கோடி டன் என்ற அளவில் உள்ள நிலையில், இது, நிர்ணயிக்கப்பட்ட உபரி அளவான, 2.12 கோடி டன்னை விட, அதிகம் என, சரத்பவார் மேலும் கூறினார்.

**அன்னிய நேரடி முதலீடு:**பன்முக பொருட்களின் சில்லரை வர்த்தகத்தில், அன்னிய நேரடி முதலீட்டிற்கான அனுமதி வரவேற்கத்தக்கது. இதனால், விவசாயிகளின் வேளாண்

பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும். மேலும், தரமான பொருட்களை நுகர்வோர் பெறமுடியும் என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வேளாண் கடன் ரூ.1.36 லட்சம் கோடி



புது டில்லி:நடப்பு 2012-13ம் நிதியாண்டின், சென்ற ஜூன் மாதத்துடன் முடிவடைந்த முதல் காலாண்டில், மத்திய அரசு, விவசாயிகளுக்கு, 1.36 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வேளாண் கடன் வழங்கி உள்ளது.நடப்பு நிதி யாண்டில், 5.75 லட்சம் கோடி ரூபாய் வேளாண் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

சென்ற 2011-12ம் நிதியாண்டில், 4.75 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு, வேளாண் கடன் வழங்க, இலக்கு நிர்ண யிக்கப்பட்டு இருந்தது. இந்த இலக்கை விட,108 சதவீதம் அதிகமாக, அதாவது,5.11 லட்சம் கோடி ரூபாய் வேளாண் கடன் வழங்கப்பட்டது.

கடந்த 2006-07ம் ஆண்டு கரீப் பருவம் முதல், விவசாயிகளுக்கு,7 சதவீத வட்டியில், 3 லட்சம் ரூபாய் வரை வேளாண் கடன் வழங்கப்பட்டு வருகிறது.சென்ற 2009-10ம் நிதியாண்டு முதல்,வேளாண் கடனை, குறித்த காலத் தில் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு, 1சதவீதம் வட்டி குறைக்கப்பட்டு, 6 சதவீதமாக குறைக்கப்பட்டது. இது, 2010-11ம் நிதியாண்டில் 2 சதவீதமாகவும், 2011- 12ம் நிதியாண்டில், 3 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்து, கடனை, ஒழுங்காகச் செலுத்தும் விவசாயிக்கான வேளாண் கடனுக்கான வட்டி விகிதம் 4 சதவீத மாக உள்ளது.சென்ற 2011-12ம் நிதியாண்டில், வேளாண் துறை 2.8 சதவீத வளர்ச்சியை கண்டிருக்கும் என, மத் திய புள்ளியியல் அலுவலகம் மதிப்பிட்டுள்ளது.சென்ற, 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில்(2007-12), வேளாண் துறையின் வளர்ச்சி, சராசரியாக 3.3

சதவீதமாக காணப்பட்டது.இது, ஒன்பதாவது ( 2.5 சதவீதம்) மற்றும் 10வது ஐந்தாண்டு திட்ட காலங்களை (2.4 சதவீதம்) விட, அதிகமாகும்.

### தேயிலை உற்பத்தியில் புதிய சிந்தனைக்கு"குவாலிட்டி அவார்டு'

குன்னூர்:தரமான தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், தேயிலை வாரியத்தின் சார்பில் தர விருது வழங்கப்படுகிறது. இது குறித்து தேயிலை வாரிய செயல்இயக்குனர் அம்பலவாணன் கூறுகையில், ""இந்தாண்டுக்கான "குவாலிட்டி அவார்டு 2011' போட்டி விரைவில் நடத்தப்பட உள்ளது. தொழிற்சாலைகளில் புதிய தொழில்நுட்பங்களை கொண்டு தேயிலை உற்பத்தி, தேயிலை வளர்ப்பு முறையில் புதிய யுக்திகள், தரத்தை மேம்படுத்தும் வகையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு இந்த விருது வழங்கப்படும். இந்த தொழில்நுட்பங்கள் மக்களுக்கு சென்று பயனளிக்குமெனில், அவர்களுக்கு இந்த விருது வழங்கப்படும். முதல் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் ரொக்கம், பல பிரிவுகளில் பரிசுகள் வழங்கப்படும்," என்றார்

### கீழ்பவானி பாசனத்துக்கு உயிர் தண்ணீர்":விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

ஈரோடு: ""கீழ்பவானி பாசனத்துக்கு நீலகிரி மாவட்ட மின் அணைகளில் இருந்து உயிர் தண்ணீர் விட வேண்டும்" என, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி கேட்டுக்கொண்டார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது: இந்தாண்டு கீழ்பவானி அணை நீர் நிர்வாகத்தை, அரசு ஆணைகளுக்கு புறம்பாகவும், விதிமுறைகளுக்கு மாறாகவும், நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராகவும் பொதுப்பணித்துறை நடத்தி விட்டது. இதனால், அட்டவணை படி ஆகஸ்ட், 15ம் தேதி பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாமல் போனது. தற்போது பாசன பகுதியெங்கும் குடிநீர் தட்டுப்பாடு வந்துள்ளது. தென்னை மரங்கள் காய்ந்து, குருத்துகள் சாயும் நிலையில் உள்ளன. இவைகளுக்காக பவானி அணையிலிருந்து ஒரு பகுதிக்கு, 15 நாள் உயிர் தண்ணீரும், மறுபகுதிக்கு, 15 நாள் உயிர் தண்ணீரும் விட முடிவெடுத்து, அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி, செப்டம்பர், 17 முதல் அக்டோபர், 2 வரை ஒரு லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. 15 நாட்கள் விடுவதாக சொல்லி, எட்டு நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. மதகு மாற்றுவதற்காக ஏழு நாட்கள் இடைவெளி விட்டு, இன்று (10ம் தேதி) தண்ணீர் விடாத மறுபகுதியான, ஒரு லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் விட வேண்டும். ஆனால், அணையில் இதற்கான தண்ணீர் இல்லை. இருக்கும் தண்ணீரை வைத்து விட இயலாது. மேற்கு தொடர்ச்சி மலையில்,

பவானி ஆறு நீர்பிடிப்பு பகுதியில் பல மின் அணைகள் உள்ளன. இவற்றின் மொத்த கொள்ளளவு, 18.3 டி.எம்.சி., இன்றைய தேதியில், 10.3 டி.எம்.சி., தண்ணீர் உள்ளது. இதில், இரண்டு டி.எம்.சி., எடுக்க முடியாத தண்ணீர், 8.3 டி.எம்.சி., தண்ணீரை கீழே கொண்டு வர முடியும். 15 நாள் தேவை இரண்டு டி.எம்.சி., மட்டுமே. கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடு வரும்போது, பாசனத்துக்கு முன்னுரிமை அளித்து, மின் அணைகளின் தண்ணீர் கீழே இறக்கப்பட வேண்டும் என, அரசு ஆணை (ஆணை எண்: 329, நாள், 1979 ஏப்ரல், 22) தெரிவிக்கிறது. இந்த அரசு ஆணை பின்பற்றப்பட வேண்டும். கடந்த, 8ம் தேதி வரை மின் அணை நீர் திறக்கப்படவில்லை. திறக்கக்கோரி பொதுப்பணித்துறை அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் மனு கொடுக்கப்பட்டுள்ளது.மின் அணைகளிலிருந்து உடன் தண்ணீரை இறக்கி, அரசு ஆணைப்படி கீழ்பவானி பாசனத்துக்கு இன்று முதல், 25ம் தேதி வரை தலைமை கால்வாயின் முழு கொள்ளளவான, 2,350 கனஅடி வீதம் தண்ணீர் வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். உழவர்

## சந்தையில் வியாபாரிகள் ஆக்கிரமிப்பு விவசாயிகள் பரிதவிப்பு

ஓசூர்: ஓசூர் உழவர்சந்தையில், வியாபாரிகள் கடைகளை ஆக்கிரமித்து கொண்டதால், விவசாயிகள், வியாபாரம் செய்ய கடைகள் இல்லாமல், தரையில் அமர்ந்து விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. ஓசூர் உழவர் சந்தை காய்கறிகள் வருகை மற்றும் விற்பனையில் தமிழகத்தில் முதல் இடத்தில் உள்ளது. இங்கு, தினம், 125 டன் முதல், 150 டன் வரை காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. கடந்த காலத்தில் இந்த உழவர்சந்தையில் விவசாயிகள் மட்டுமே காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்தனர். தற்போது, 20 சதவீதம் விவசாயிகள் மட்டுமே காய்றிகள் விற்பனை செய்கின்றனர். 80 சதவீதம் பேர் வியாபாரிகள் கடை விரித்து வருகின்றனர். விவசாயிகள், தங்கள் நிலத்தில் சாகுபடி செய்த காய்கறிகளை மட்டுமே விற்பனைக்கு கொண்டு வர வேண்டும். காய்கறிகள் பெயர் அவர்கள் கொண்டு வரும் அடையாள அட்டையில் அதிகாரிகள் குறிப்பிட வேண்டும். மேலும், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், மாதம் ஒரு முறை உழவர்சந்தை விவசாயிகளுடைய விளை நிலத்துக்கு சென்று அவர்கள் சாகுபடி செய்த காய்கறிகள், சந்தைக்கு கொண்டு வரும் காய்கறிகள் தானா? என ஆய்வு செய்ய வேண்டும். விளைநிலத்தில் விளையாத காய்கறிகளை சந்தைக்கு கொண்டு வரும் விவசாயிகள் உழவர்சந்தை அட்டைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சந்தையில் வியாபாரிகள் கண்டிப்பாக வியாபாரம் செய்ய கூடாது. ஆனால், ஓசூர் உழவர்சந்தையில்

அதிகாரிகள் ஆசியுடன் தேங்காய், காய்கறிகள், பழங்கள், பூக்களை கொண்டு வந்து வியாபாரிகள் பொதுமக்களிடம் கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதற்காக வியாபாரிகள், சந்தை அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட தொகை மாமூல் வழங்குகின்றனர். அதனால், சந்தை அதிகாரிகள் வியாபாரிகளை கண்டுகொள்வதில்லை. தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், விவசாயிகள் நிலத்திற்கு சென்று காய்கறிகளை ஆய்வு செய்வதில்லை. வியாபாரிகள் பிடியில் உழவர் சந்தை இருப்பதால், வியாபாரிகள் தாங்கள் கொண்டு வரும் பொருட்களை விற்பனை செய்ய கடைகள் கிடைக்காமல், தரையில் அமர்ந்து விற்பனை செய்து வருகின்றனர்.

## விவசாய கடன் வழங்கும் முகாம்

சிவகங்கை: ""தேவகோட்டை, இளையான்குடியில் விவசாய கடன் வழங்கும் முகாம் நடைபெறும்," என, முன்னோடி வங்கி மேலாளர் பெருமாள் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: நெல் பயிர் சாகுபடி, விவசாய தேவைகளை முன்னிட்டு கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பயிர்கடன், விவசாய கடன்கள் வழங்கும் சிறப்பு முகாம் நடக்க உள்ளது. தேவகோட்டை வட்டார விவசாயிகளுக்கு,அக்.,11 அன்று, ஊராட்சி ஒன்றியத்திலும்,அக்.,12 அன்று இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்தில்,காலை 10 மணி முதல் பகல் 2 மணி வரை நடக்கும்.விவசாயிகள் முகாமில் பங்கேற்று,விவசாய கடன்களை பெறலாம்,என்றார்.

## கால்நடை மருத்துவ முகாம்

தாண்டிக்குடி: பெரியூர் ஊராட்சியில் கால்நடை பாதுகாப்பு திட்ட மருத்துவ முகாம் ஊராட்சி தலைவர் ரமேஷ்பாபு தலைமையில் நடந்தது. டாக்டர்கள் அருண், ராஜேந்திரன் சிகிச்சையளித்தனர். குடற்புழு நீக்கம், தடுப்பு ஊசிகளின் அவசியம் கால்நடை பராமரிப்பு குறித்து விளக்கம் தரப்பட்டது. கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஜெயந்தி உட்பட பலர் பங்கேற்றனர்

## காவிரி பிரச்னை குடந்தையில் விவசாயிகள் இன்று ஆலோசனை

கும்பகோணம்: காவிரி பிரச்னையில் அடுத்த கட்ட நவடிக்கை எடுப்பது தொடர்பாக, காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாய சங்க பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், தமிழ் அமைப்பினர் பங்கேற்கும், அவசர ஆலோசனை கூட்டம் கும்பகோணத்தில் இன்று நடக்கிறது. தமிழகத்திற்குரிய காவிரி நீரை பெற, பல கட்ட போராட்டங்களை நடத்தி, நமது உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக விவசாய சங்கங்கள், டெல்டா மாவட்ட தமிழ் அமைப்புகள்

சார்பில் காவிரி உரிமை மீட்பு குழு உருவாக்கப்பட்டது. இந்த குழுவின் சார்பில் கடந்த, 6ம் தேதி டெல்டா மாவட்டங்களில் தொடர் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. இந்நிலையில் காவிரி நீர் பிரச்சினையில் கர்நாடக அரசின் பிடிவாதம், மத்திய அரசின் நிலைப்பாடு, உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகள், தமிழக அரசுக்கான ஆலோசனைகள், டெல்டா மாவட்டங்களில் காய்ந்து கொண்டிருக்கும் சம்பா நெல்பயிரை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க, அவசர ஆலோசனை கூட்டம் கும்பகோணத்தில் இன்று மாலை, நான்கு மணிக்கு, ஆதிகும்பேஸ்வரன்கோயில் மேலவீதியில் உள்ள நாடார் திருமண மண்டபத்தில் நடக்கிறது. கூட்டத்துக்கு தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட விவசாய சங்கங்களின் தலைவர் சேரன் தலைமை வகிக்க உள்ளார். பொதுச் செயலாளர் ஆறுபாதிகல்யாணம், தமிழ் தேசப்பொதுவுடமை கட்சி தலைவர் மணியரசன், கீவளூர் தனபால் மற்றும் திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்கின்றனர்.

## மானாமதுரையில் மழை

மானாமதுரை: மானாமதுரையில் நேற்று மாலை 4.30 மணிக்கு இடியுடன் கூடிய மழை பெய்யத் தொடங்கி6.30 மணி வரை நீடித்தது. காந்திசிலை,வழிவிடுமுருகன் கோவில்,சேதுபதி நகர், மருதுபாண்டியர் நகர், ஆதனூர் பகுதிகளில் மழை நீர் தேங்கியது.கடந்த சில நாட்களாக வாட்டிய வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. சுற்று வட்டார பகுதிகளிலும் நல்ல மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## பூச்சிகொல்லி மருந்து பயன்பாடு அழிவின் பாதையில் பறவை இனங்கள்

குன்னூர்:"பெருகி வரும் பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாடு காரணமாக, வாரம் ஒரு பறவையினம் அழிந்து வருகிறது,' என கானுயிர் வார விழாவில் கவலை தெரிவிக்கப்பட்டது.

பெட்டட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் உலக கானுயிர் வாரத்தை முன்னிட்டு சிறப்பு கருத்துரங்கு நடந்தது. நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமையாசிரியர் மனோகரன் தலைமை வகித்தார். தேசிய பசுமை படை திட்டத்தின் குன்னூர் கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தலைமையாசிரியர் லட்சுமி நாராயணன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட செயலாளர் ஆசிரியர் ராஜு சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசுகையில்,""ஒரு புலி வாழ 25 சதுர கி.மீ., வனப்பகுதி தேவை.

அத்தகைய ஒரு காட்டில் அனைத்து உயிரினங்களும் வாழும். மேலும் அங்கு நிதி உற்பத்தியாகும். எனவே தான் புலியை பல்லுயிரின விலங்கு என அழைக்கின்றனர். யானை தன் கழிவு மூலம் 16 தாவர இனங்கள் தழைக்க உதவுகிறது. ஒவ்வொரு பாம்பும் ஒரு நாளைக்கு ஆறு எலிகளை சாப்பிட்டு நம் உணவு தானியத்தை காக்கிறது. ஒரு ஆந்தை ஒரு இரவில் 32 எலிகளை சாப்பிட்டு அதன் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துகிறது. உலகில் 8,300 வகையான பறவையினங்கள் உள்ளன. பெருகி வரும் பூச்சிக்கொல்லி மருந்து பயன்பாடு காரணமாக வாரம் ஒரு பறவையினம் அழிந்து வருகிறது," என்றனர்.

ஆசிரியை புஷ்பா வரவேற்றார். ஆசிரியை ஜெயலட்சுமி நன்றி கூறினார். நிகழ்ச்சியை முன்னிட்டு மாணவர்களுக்கு நீலகிரி பசுமை படை திட்டத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட "ஜக்கு' என்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறும்படம் காண்பிக்கப்பட்டது.

## கரூரில் திடீரென கொட்டிய மழை

கரூர்: கரூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு பரவலாக நல்ல மழை பெய்தது. அதிகப்பட்சமாக மயிலம்பட்டியில் 92.3 மி.மீ., மழை பெய்தது. நடப்பாண்டு கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. தற்போது வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆனால், கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், கடந்த, ஒரு வாரமாக கோடையை போன்று வெயில் சுட்டெரித்தது. இந்நிலையில் நேற்றிரவு கரூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மேகமூட்டம் இருந்தது. இரவு, 9 மணிக்கு கரூரில் மழை பெய்ய தொடங்கியது. மழை நிலவரம் வருமாறு (மி.மீ.,): கரூர் 39.6, மாயனூர் 27, குளித்தலை 88.4, கடவூர் 7.4, பாலவிடுதி 20.1, அரவக்குறிச்சி 7.2, அணைப்பாளையம் 45, க.பரமத்தி 89.6, கிருஷ்ணராயபுரம் 35 ஆகிய அளவுகளில் மழை பெய்தது. கரூர் மாவட்டத்தில் 478.5 மி.மீ., மழையும், சராசரியாக 39.8 மி.மீ., மழையும் பதிவானது. மாவட்டத்தில் அதிகபட்சமாக மயிலம்பட்டியில் 92.3 மி.மீட்டர் மழை பெய்தது.

# விவசாய மலர்

**பருத்தி விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**



**உழவியல் முறைகள்:**

கோடையில் உழுதல் - பூச்சிகளின் முட்டை மற்றும் புழுக்கள் வெளிக் கொணரப்பட்டு அழியும். அமில விதை நேர்த்தி செய்த விதைகளை பயன்படுத்துதல். பூஞ்சாண உயிர்கொல்லி டிரைக்கோடெர்மா விதைநேர்த்தி செய்தல் (1 கிலோ விதைக்கு 3 கிராம் வீதம்). உயிர் உரமான அசோஸ்பைரில்லம் கொண்டு விதைநேர்த்தி செய்தல் (ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட்டுகள் (200கிராம் ஒரு பாக்கெட் எடை)). வேப்பம் புண்ணாக்கு இடுதல் (100 கிலோ/ஏக்). பொறிப்பயிர்கள் முறையே சூரியகாந்தி, சாமந்தி பயிரிடுதல்.

உயர் விளைச்சல் மற்றும் நோய் எதிர்ப்புத்தன்மை கொண்ட ரகங்களை பயிரிடுதல். ஊடுபயிராக உளுந்து மற்றும் பாசிப்பயிர் பயிரிடுதல். தரம் வாய்ந்த மற்றும் சான்று பெற்ற விதைகளை விதைத்தல். கிராமம் முழுவதும் ஒரே ரகமான விதைகளை விதைத்தல். தோட்டக்கால் சால் முறையில் பருத்தி விதையை விதைத்தல். வரப்பு பயிர்கள் மக்காச்சோளம், சோளம் மற்றும் ஆமணக்கு பயிரிடுதல். பருத்தி மறுதாம்பு பயிர் விடுதலை தவிர்த்தல்.

**கைவினை முறைகள்:**

விளக்கு பொறி வைத்தல் (5 எண்ணம்/ஏக்கருக்கு). இனக்கவர்ச்சிப்பொறி வைத்தல் (5 எண்ணம்/ஏக்). கருநீலத்துணி விரித்தல் (2 சதுர அடி அளவில் 10 இடங்களில் / ஏக்). முட்டை மற்றும் புழுக்கள் துணியின் அடியில் தங்குவதால் அதை சேகரித்து அழிக்கலாம். மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி வைத்தல் (5 எண்ணம்/ஏக்).

"டி' வடிவ குச்சியை நடுதல் (6 எண்ணம்/ஏக்) இந்த குச்சியில் பறவைகள் அமர்ந்து புழுக்களை

கண்காணித்து அதை உண்டுவிடும். பருத்தியை தாக்கும் பூச்சிகளின் முட்டை, புழு மற்றும் கூட்டுப் புழுக்களை சேகரித்து அழித்தல். பூச்சி மற்றும் நோய் தாக்கப்பட்ட காய்கள், சப்பைகள், பூக்கள் மற்றும் இதர உதிர்ந்த பொருட்களை அகற்றி அழித்துவிடுதல்

**உயிரியல் முறைகள்:**

காய்ப்புழுவை கட்டுப்படுத்த 200மிலி என்.பி.வி. வைரஸ்/ஏக் தெளித்தல்.

தூரிசைடு (பாசில்லஸ் துரிஞ்சியன்சிஸ்) ஏக்கருக்கு 300 கிராம் தெளித்தல்.

**நன்மை செய்யும் பூச்சிகள்:**

டிரைக்கோகிரம்மா முட்டை அட்டையைப் பொருத்துதல் (ஏக்கருக்கு 4 சிசி சி40 துண்டு அட்டைகள்). கிரைசோபா ஊன் உண்ணி ஏக்கருக்கு 5000 வெளியிடுதல். ஊன் உண்ணி ரெடுவிட் நாவாய்பூச்சி ஏக்கருக்கு 2000 வெளியிடுதல். முட்டை, புழு, ஒட்டுண்ணி சேலோனஸ் பிளாக்பர்னி ஏக்கருக்கு 5000 வெளியிடுதல்.

**ரசாயன முறைகள்:**

பருத்தி வயலில் பயிரைத் தாக்கும் பல பூச்சிகளின் பொருளாதார சேத நிலையைப் பின்பற்றி அதற்கேற்றவாறு பூச்சிக்கொல்லிகளை தெளித்தல்.

வ.எண். - பூச்சிகள் - பொருளாதார சேதநிலை

1. - இலைப்பேன் - இலைக்கு 2 பூச்சிகள்
2. - தத்துப்பூச்சி - இலைக்கு 2 பூச்சிகள்
3. - அசுவினி - 15 முதல் 20% வரை தாக்கப்பட்ட செடிகள்
4. - பயிர்ச்சிலந்தி - 1 சதுர செ.மீ.க்கு 10 சிலந்தி பூச்சிகள்
5. - காய்ப்புழு - 10% தாக்கப்பட்ட காய்கள்
6. - வெள்ளை ஈ - ஒரு இலைக்கு 5 முதல் 10 வெள்ளை ஈ
7. - புரோடினியா புழு - 50 மீட்டர் நீளத்தில் 4 முட்டை குவியல்கள்
8. - தண்டுக் கூன்வண்டு - 10% தாக்கப்பட்ட செடிகள்

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பொருளாதார சேதநிலையை தாண்டிவிட்டால் கீழே உள்ள பாதுகாப்பான ரசாயன பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தலாம்.

1. எண்டோசல்பான் 250மிலி மற்றும் பாசலோன் 100மிலி/ஏக். தெளித்தல்.
2. வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லி அசாடிராக்டின் ஏக்கருக்கு 200மிலி தெளித்தல்.
3. கார்போபியூரான் குருணை ஏக்கருக்கு 12 கிலோ இடுதல்.

பூச்சிக்கொல்லிகளை மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும். பகல் நேரங்களில் தெளித்தால் சூரிய ஒளியில் பூச்சிக்கொல்லிகள் ஆவியாகிவிடுவதோடு மட்டுமல்லாமல் புழு மற்றும் பூச்சிகள்

இலைக்கு அடியில் போய் மறைந்துகொள்ளும். மேலும் மாலை நேரங்களில் புழு மற்றும் பூச்சிகள் வெளியில் வரும். அப்போது தெளித்தால் உடனே அழிந்துவிடும்.
ஒரே பூச்சிக்கொல்லி திரும்பத்திரும்ப பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். நீங்கள் பயன்படுத்திய பூச்சிக்கொல்லிக்கு கட்டுப்படவில்லை என்றால் மற்றொன்றை பயன்படுத்த வேண்டும்.

## நவீன தொழில்நுட்பம்



**சிக்கன நீர் நிர்வாகம்:**
கரும்பிற்கு 2000 முதல் 2500 மி.மீ. அளவு நீர் தேவைப்படுகிறது. கரும்பு ஓர் ஆண்டு பயிர் என்பதால் பருவமழை போக எஞ்சியுள்ள மாதத்தில் நீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே நிலத்தடி நீர்ப்பாசனம் அல்லது அடிப்பரப்பு நீர் பாசனம் முறையை மேற்கொண்டு நீர் பற்றாக் குறையை சமாளிப்பதுடன் மொத்த விளைச்சலையும் அதிகரிக்கலாம். மேலும் நமது மொத்த நீர்ப்பாசனப் பரப்பையும் அதிகரிக்கலாம்.
நிலத்தடி நீர்ப்பாசனம் அல்லது அடிப்பரப்பு நீர்ப்பாசனம் என்பது வழக்கத்தில் உள்ள சொட்டு நீர்ப்பாசனம் போல் அல்லாமல் பயிருக்கு மிகத்துல்லியமான அளவு நீரினை சரியான அளவு உரம், பூச்சிக்கொல்லி மருந்துடன் வேருக்கு நேரடியாகக் கொடுப்பதாகும்.

**முக்கிய நோக்கம்:**
பக்கவாட்டில் நீர் பரவுதல் மண்ணில் கீழ்நோக்கிய நீர்க்கசிவை குறைத்தல், பயிரின் வேரைச்சுற்றி நீர் இருத்தல். வேரின் நான்கு புறமும் வட்டவடிவில் நீரைப் பரவச்செய்து மண்ணில் கீழ்நோக்கிய நீர்க்கசிவு, பக்கவாட்டில் நீர் பரவுவதைக் குறைப்பதே இதன் முக்கிய குறிக்கோளாகும். மேலும் உரம், பூச்சிக்கொல்லி மருந்தினை நீருடன் கலந்து கொடுப்பதன் மூலம் அதிக, தரமான விளைச்சல் கிடைக்கிறது.

**சொட்டு நீர்ப்பாசனம் / நிலத்தடி நீர்ப்பாசனம் வேறுபாடுகள்:**
சொட்டு நீர்ப்பாசனத்தில் சொட்டுவான் கீழ்நோக்கி இருப்பதால் கீழ்நோக்கிய நீர்க்கசிவு பக்கவாட்டில் நீர்பரவுதல் அதிகமாக இருக்கும். ஆனால் நிலத்தடி நீர்ப்பாசனத்தில் சொட்டுவான் மேல்நோக்கி இருக்குமாறு அமைப்பதால் வேரின் நான்குபுறமும் வட்டவடிவில் நீர் பரவி பயிரின் வேரை எப்பொழுதும் ஈரத்துடன் வைத்துக்கொள்கிறது. இதனால் பயிர் எப்பொழுதும் செழிப்பாக இருக்கும். மேலும் மண்ணில் காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்து மண்ணில் நீர் நுண்புழை நீர் பரவும் விதத்தை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் மண்ணில் நுண்ணுயிர் பெருகி மண்வளம் கூடுகிறது.

**நீர்ப்பாசனம் அமைக்கும் முறை:**
25 முதல் 30 செ.மீ. அளவு அதாவது முக்கால் அடி முதல் ஒரு அடி வரை ஆழமும், 40 செ.மீ. அகலமும் உள்ள அகழியை நீளவாக்கில் எடுக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 5 அடி முதல் ஐந்தரை அடி வரை இருக்கு மாறு பார்த்துக்கொள்ள வேண்டும். குறைந்த செலவு உள்பக்கவாட்டு குழாய்களை அகழியின் நடுவில் 25-30 செ.மீ. ஆழத்தில் வைத்து சொட்டுவான் மேல்நோக்கி இருக்குமாறு அமைக்க வேண்டும். பின் அதன்மேல் 2.5 செ.மீ. அளவு மண்ணைப்போட்டு மறைத்தல் வேண்டும். இரு பரு கரணைகளைப் பக்கவாட்டு குழாய்களுக்கு இரு பக்கமும் ஒன்றரை கரணையாக அடுக்கி, பின் கரணை மூடும் அளவிற்கு மண்ணைப் பரப்பி மூடுதல் வேண்டும். மீதமுள்ள அகழியினைப் பயிர் நன்கு முளைத்தபின் (40-45வது நாள்) மூடி பயிருக்கு மண்ணை அணைக்க வேண்டும்.

**நன்மைகள்:**
ஒரே சீராக இருக்கும். பயிர் வளர்ச்சி குறைந்த அளவு கீழ்நோக்கிய நீர்கசிவு பக்கவாட்டில் நீர் பரவுதல் குறைய வாய்ப்பு உள்ளது. காற்று சூரிய வெப்பத்தினால் மண் மேற்பரப்பிலுள்ள ஈரப்பதம் வீணாதல் குறையும். பயிருக்கு தேவையான அளவு நீரினை மிகச்சரியான அளவு நீருடன் உரம், பூச்சிக்கொல்லி மருந்தினைக் கொடுப்பதன் மூலம் பயிரின் தரமும் விளைச்சலும் அதிகரிக்கிறது. நோய், பூச்சி தாக்குதல் குறைவு. வரிசைக்கு வரிசை பயிரின் இடையே களை முளைத்தல் குறையும். பரந்த மிக துரிதமாக வேர் வளர்ச்சியடையும். அனைத்தையும்விட சொட்டுநீர்ப்பாசனத்தைவிட நீர் சிக்கனமாக செலவாகும்.
(தகவல்: முனைவர் எம்.விஜயகுமார், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்-638 451. போன்: 04295-240 244)

## தென்னை சாகுபடியில் வினையியல் இடர்பாடுகளும் நிவர்த்தியும்



**ஒல்லிக்காய்கள்:**

தென்னையில் 3 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை ஒல்லிக்காய்கள் ஏற்படுகின்றன. மானாவாரி தோப்புகளிலும் சரியாக பராமரிக்கப்படாத தோப்புகளிலும் ஒல்லிக்காய்கள் அதிகமாக தோன்றுகின்றன.

**காரணங்கள்**: பாரம்பரிய குணம், ஊட்டச்சத்து பற்றாக்குறை, குறைவான மகரந்த சேர்க்கை. நிவர்த்தி முறை: தரமான கன்றுகளை நடவு செய்தல்; பரிந்துரை செய்யப்பட்ட உர அளவிற்கு மேலாக மரத்திற்கு கூடுதலாக ஒரு கிலோ பொட்டாஷ் மற்றும் 200 கிராம் போராக்ஸ் உரங்களை தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இடுதல்; தேனீக்களை வளர்த்தல்; 200 மில்லி தென்னை டானிக் ஆண்டுக்கு இரு முறை கொடுத்தல் போன்றவைகளாகும்.

**நுனி சிறுத்தல்:**

மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மரத்தில் நுனிப்பகுதி பென்சில் முனை போன்று காணப்படும். காய்களின் உற்பத்தி குறைந்து சிறுத்துக் காணப்படும். இலைகளின் இணுக்களில் பச்சையம் குறைந்து காணப்படும். மட்டைகளின் நிறம் மற்றும் அகலம் குறைந்து சிறுத்துக் காணப்படும். பாளைகளின் உற்பத்தி குறைந்தும் சிறுத்தும் தோன்றும். இறுதியில் மரம் பட்டுவிடும்.

**காரணங்கள்:** சரியாக பராமரிக்கப்படாத தோப்புகள், தகுந்த சூழ்நிலை அமையாதல், வயதான மரங்கள். தீர்வுகள்: மரங்களை வெட்டி அகற்றிவிட்டு தரமான புதிய கன்றுகளை நடவு செய்தல், கோடையில் தண்ணீர் பாய்ச்சுவது, பரிந்துரை செய்யப்பட்ட உரங்களை இடுவது, அரை கிலோ நுண்ணூட்டக் கலவை அல்லது 200 மில்லி தென்னை டானிக் இருமுறை இடவேண்டும்.

**குரும்பை உதிர்தல்:**

தென்னையில் குரும்பை உதிர்தல் ஒரு முக்கியமான பயிர் வினையியல் இடர்பாடாகும். பாளை வெடிக்கத் துவங்கியது முதல் 3-4 மாதங்கள் வரை குரும்பைகள் தொடர்ந்து கொட்டிக்கொண்டே இருக்கும்.

**காரணங்கள்:** பாரம்பரிய குணம், மண்ணின் அதிக உவர் மற்றும் களர் தன்மை, வறட்சி, நீர்

தேங்குதல், மண்ணில் சத்துப் பற்றாக்குறை, குறைந்த மகரந்தச் சேர்க்கை, குறைவான பயிர் வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி மற்றும் நோய்கள். நிவர்த்தி முறைகள்: தோப்புகளில் ஒன்று அல்லது இரண்டு மரங்களில் பாரம்பரிய குணத்தால் குரும்பை முழுவதும் கொட்டிவிடும். காய்கள் பிடிக்காது. இவ்வகை மரங்களை அகற்றிவிட்டு தரமான கன்றுகளை நடவு செய்ய வேண்டும். மண்ணின் கார அமிலத்தன்மை (பிஎச்) குறைவாகும் அல்லது அதிமாகும் போது குரும்பைகள் உதிரும். எனவே மண் ஆய்வு செய்து அமிலத்தன்மை கொண்ட மண்களுக்கு சுண்ணாம்பும் காரத்தன்மைக்கு ஜிப்சம் இட்டும் சரிசெய்யலாம். தட்பவெப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு நீர் பாய்ச்ச வேண்டும். பொதுவாக 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சுதல் அவசியம். நுண்ணூட்ச்சத்து பற்றாக்குறையினால் குரும்பைகள் உதிரும். தென்னைக்கு பரிந்துரை செய்யப்பட்ட கலவை மரம் ஒன்றிற்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை அரை கிலோ இடலாம். அல்லது தென்னை டானிக் 200 மில்லியை வேர் மூலம் செலுத்தலாம்.

**இலை விரியாமை:**

தென்னை இலைகள் சிறுத்து விரிவடையாமல் காணப்படும். இலைகள் சாதாரண முறையில் விரிவடையாமல் ஒன்றுக்கு ஒன்றுபின்னிக்கொண்டு இலைகள் வெளிவர இயலாத நிலையில் இருக்கும். சில சமயங்களில் குரும்பைகளும் உதிர்ந்துவிழும்.

**காரணங்கள்:** போரான் சத்து பற்றாக்குறை. நிவர்த்தி முறைகள்: மரம் ஒன்றிற்கு 50 கிராம் போராக்ஸ் உரத்தை அரை கிலோ மணலுடன் கலந்து இரண்டு முறை தொடர்ந்து மூன்று மாத இடைவெளியில் இட்டு மண் அணைக்க வேண்டும்.

கொ.பாலகிருஷ்ணன், பேராசிரியர் (பயிர் வினையியல்) மற்றும் கு.சிவசுப்பிரமணியம்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் துறை,
வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
மதுரை-625 104.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

09.10.2012 P.M

10.10.2012 A.M

## உணவு தானிய உற்பத்தி நடப்பாண்டில் குறையும்



புதுடெல்லி : டெல்லியில் பொருளாதார பத்திரிகை ஆசிரியர்கள் மாநாடு கடந்த 2 நாளாக நடைபெற்று வருகிறது. இம்மாநாட்டில் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத் பவார் நேற்று பேசியதாவது: பருவ மழை தாமதத்தால், காரிப் பருவத்தில் உணவு தானிய உற்பத்தி 10 சதவீத அளவுக்கு குறைந்துள்ளது. 11 கோடி 71 லட்சம் டன் அளவுக்கே உற்பத்தி இருக்கும்.

கடந்த 2 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி அபரிதமாக இருந்தது. ஒரு கோடி டன் அரிசி, தலா 25 லட்சம் டன் கோதுமை, சர்க்கரை ஏற்றுமதி செய்திருக்கிறோம். கடந்த ஆண்டில் 25 கோடி 74 லட்சம் டன் உணவு உற்பத்தியானது. இந்த ஆண்டில் இது நிச்சயமாக குறையும். எனினும், தேவைக்கு அதிகமாக உணவு தானிய இருப்பு உள்ளதால், பற்றாக்குறை வராது. நமது ஆண்டு தேவை 2.12 கோடி டன் மட்டுமே. தற்போது, மத்திய உணவு கிடங்குகளில் 7 கோடி டன் இருப்பு உள்ளது.


இவ்வாறு சரத் பவார் கூறினார்.

## பாதாம் பருப்பு இறக்குமதி 80,000 டன்னாக உயரும்



புதுடெல்லி : இந்த ஆண்டில் பாதாம் இறக்குமதி 7.2 சதவீதம் அதிகரித்து, 80,000 டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பற்றி, அமெரிக்க வேளாண்மை துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: இந்தியாவில் ஆண்டுக்கு 1100 முதல் 1200 டன் பாதாம் பருப்பு உற்பத்தியாகிறது. ஆனால், அதன் தேவை அதிகமாக உள்ளதால், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இந்தியா இறக்குமதி செய்கிறது. கடந்த ஆண்டில் இந்தியா 74,600 டன் இறக்குமதி செய்தது. நடப்பாண்டில் இது 7.2 சதவீதம் அதிகரித்து 80,000 டன்னை எட்டும் என கணக்கிடப்படுகிறது. இதில் 72 சதவீதம் வரை அமெரிக்காவில் இருந்துதான் இறக்குமதி செய்கின்றனர்.

## சர்க்கரை கிலோவுக்கு ரூ.5 குறைந்தது



சென்னை : கரும்பு விளைச்சல் அதிகரிப்பால், சர்க்கரை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேபோல், பருப்பு வகைகளும் விலை குறைந்துள்ளது. இந்தியாவில் உற்பத்தியாகும் சர்க்கரை வெளிநாடுகளுக்கு அதிக அளவு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது, வெளிநாடுகளில் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் சர்க்கரையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை

மத்திய அரசு நிறுத்தியுள்ளது.

மேலும், இந்தியாவில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு மத்திய அரசு 20 லட்சம் டன் சர்க்கரையை ஒதுக்கியுள்ளது. அதுமட்டுமின்றி மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், ஆந்திரா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் கரும்பு விளைச் சல் அமோகமாக உள்ளது. இதன் காரணமாக சர்க்கரை விலை வரலாறு காணாத வகையில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

அதாவது, கடந்த வாரம் சர்க்கரை (100 கிலோ மூடை) ரூ.3,900க்கு விற்றது. அது ரூ.550 குறைந்து தற்போது ரூ.3,350க்கு விற்கப்படுகிறது. 1 கிலோ ரூ.40 லிருந்து ரூ.35 ஆக குறைந்துள்ளது. இதேபோல், அரியானா, டெல்லி, மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில் அதிக விளைச்சல் மற்றும் தான்சானியா உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து அதிக அளவு இறக்குமதியால் பருப்பு விலையும் சரிந்துள்ளது.

கடந்த வாரம் துவரம்பருப்பு (100 கிலோ) ரூ.8,000க்கு விற்றது ரூ.7,200 ஆக குறைந்துள்ளது. 1 கிலோ ரூ.85லிருந்து ரூ.75 ஆகவும், பாசிப்பருப்பு ரூ.85லிருந்து ரூ.75, பாசிப்பருப்பு(2ம்ரகம்) ரூ.75லிருந்து ரூ.65, பர்மா உளுந்தம் பருப்பு ரூ.65லிருந்து ரூ.55, உளுந்தம்பருப்பு ரூ.75லிருந்து ரூ.62, தான்சானியா துவரம்பருப்பு ரூ.70 லிருந்து ரூ.60, கடலை பருப்பு ரூ.75 லிருந்து ரூ.70, கடலை பருப்பு(2ம்ரகம்) ரூ.70 லிருந்து ரூ.65, மைசூர் பருப்பு ரூ.65லிருந்து ரூ.50 ஆக குறைந்துள்ளது.

இதேபோல், ஏசி மிளகாய் ரூ.140 லிருந்து ரூ.110, நீட்டு மிளகாய் ரூ.100 லிருந்து ரூ.85, நாட்டுப் பூண்டு ரூ.60 லிருந்து ரூ.40, நாட்டுப்பூண்டு (2ம் ரகம்) ரூ.40 லிருந்து ரூ.25, கொத்தமல்லி ரூ.70 லிருந்து ரூ.60, புளி ரூ.110லிருந்து ரூ.90, புளி(2ம்ரகம்) ரூ.80 லிருந்து ரூ.60, சேலம் வெல்லம் ரூ.40 லிருந்து ரூ.35, வேலூர் வெல்லம் ரூ.45 லிருந்து 40 ஆகவும் விலை குறைந்துள்ளதாக தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி. சொரூபன் தெரிவித்தார்.

அவர் கூறுகையில், ‘வடமாநிலங்களில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை அதிக அளவில் பெய்துள்ளதால் பருப்பு விளைச் சல் அமோகமாக உள்ளது. இதனால், பருப்பு விலை

குறைந்துள்ளது. வரும் காலங்களில் 100 கிலோ மூடைக்கு ரூ.500 முதல் ரூ.1000 வரை விலை குறைய வாய்ப்புள்ளது' என்றார்.

9th oct 2012 P.M

**சிறு விவசாயிகளின் குழந்தைகள் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வரவேற்பு**

மதுரை, : மதுரை மா வட்ட சிறு விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் குழந்தைகள் உழ வர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் அன்சுல் மிஸ்ரா அறிவித்துள்ளார்.

அவர் விடு த்துள்ள அறி க்கை: மாவட்ட சிறு விவசா யிகள் மற்றும் விவசாய தெழிலாளர்கள், உழவர் பாது காப்பு திட்டத்தின்கீழ் பதிவு செய்தவர்களின் குழந்தைகளுக்கு உழ வர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகி றது. இதன்படி பிளஸ்2 வகுப்பிற்கு மேல் படிப்பவர் கள், தொழிற்பயிற்சி நிறுவ னம் ஐடிஐ மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி(பாலிடெ க்னிக்), கவின் கலை ஆசிரி யர் பயிற்சி, செவிலி யர் பட்டயப்படிப்பு படிப்பவர்களுக்கு: ஆண்டு ஒன்றிற்கு விடுதியில் தங்காத மாணவர்களுக்கு ரூ.ஆயிரத்து 250, மாணவிகளுக்கு ரூ.1, 750, விடுதியில் தங்கி படிக் கும் மாணவர்களுக்கு ரூ.1, 450, மாணவிகளுக்கு ரூ.1,950 வழங்கப்படும்.இளங்கலை பட்டப்படிப்பு, கவின் கலை இளங்களை ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ரூ.1,750, மாணவிக்கு ரூ.2 ஆயிரத்து 250, விடுதியில் தங்கி படிக் கும் மாணவருக்கு ரூ.2 ஆயி ரம், மாணவிக்கு ரூ.2,500, இதே துறையில் முது கலை படிப்பு மாணவருக்கு ரூ.2 ஆயிரத்து 250, மாண விக்கு ரூ.2,750, விடுதியில் தங்கி படிக்கும் மாணவருக்கு ரூ.3 ஆயிரத்து 250, மாணவிக்கு ரூ.3 ஆயிரத்து 750 வீதம் வழங்கப்படும்.

சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை, அறிவியல், வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் இளநிலை தொழிற்கல்வி படிக்கும் மா ணவர்களுக்கு ரூ.2 ஆயி ரத்து 250, மாணவிக்கு ரூ.2 ஆயிரத்து 750, விடுதியில் தங்கி படிக்கும் மாணவருக்கு ரூ.4 ஆயிரத்து 250, மாண விக்கு ரூ.4 ஆயிரத்து 750, விடுதி மாணவருக்கு ரூ.6 ஆயிரத்து 250, மாணவிக்கு ரூ.6 ஆயிரத்து 750 வழங்கப்படும்.

இந்த கல்வி உதவித்தொ கை பெற விண்ணப்பம் தயார் செய்து தங்களின் வட்டத்திலுள்ள சமூக பா துகாப்புத்திட்ட தாசில் தாருக்கு மனுசெய்து கொள்ள லாம். மேலும் உழவர் அட் டை இல்லாத குடும்பத்தை சார்ந்தவர்கள் சிறு விவ சாயி மற்றும் விவசாயத் தொழிலாளியாக இருக்கும்

பட்சத்தில் சம்பந்தப்பட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தாசில்தாரை அணுகி விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக கூடு தல் தகவல் பெற மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள தகவல் மையம் தொ லைபேசி எண் 0452-25 26888, 2521444 என்ற எண்ணிகளிலும், சமூக பாது காப்பு திட்ட தாசில்தார்கள் தொலை பேசி எண்கள்: தெற்கு-9486467675, வட க்கு-9943728330, மேலூர் - 9843978465, வாடிப்பட்டி -9488480723, உசிலம் பட்டி-9677987145, திருமங்கலம்-9443830100, பேரை யூர்-9843907636 என்ற எண்களில் தொடர்பு கொ ண்டு விளக்கங்களை பெறலாம் என தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 18,000 கனஅடி நீர்திறப்பு

மேட்டூர், : மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக நீர்திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை 8 மணி முதல் விநாடிக்கு 18,000 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கர்நாடக அரசு, கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் விநாடிக்கு 9,000 கனஅடி தண்ணீர் திறந்து விட்டுள்ளது. இந்நிலையில், 6ம் தேதி நள்ளிரவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்தது. வனப்பகுதியில் பெய்த மழையால் காவிரியில் நேற்று முன்தினம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்தும் அதிகரிக்க தொடங்கியது.

நேற்று முன்தினம் காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 10,940 கன அடியாகவும், பகல் 12 மணிக்கு 26,313 கனஅடியாகவும், மாலை 4 மணிக்கு 29,926 கன அடியாகவும் நீர்வரத்து அதிகரித்தது. இந்நிலையில் மழை குறைந்ததால் நேற்று காலை நீர்வரத்து சரிந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 27,379 கனஅடியாக இருந்த நீர்வரத்து, மாலை 4 மணிக்கு விநாடிக்கு 16,265 கன அடியாக குறைந்தது.

திடீரென நீர்வரத்து உயர்ந்ததால் நேற்று முன்தினம் மாலை 71.10 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று மாலை 72.05 அடியாக உயர்ந்தது. இந்நிலையில், காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து நீர்திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 17ம் தேதி முதல் விநாடிக்கு 15,000 கனஅடி நீர் திறக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று காலை 8 மணி முதல் விநாடிக்கு 18,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

**சுரண்டை பகுதியில் கடும் வறட்சி லாரி தண்ணீரை நம்பி விவசாயம் கண்ணீரில் விவசாயிகள்**

சுரண்டை, : மழை பெய்யாததால் சுரண்டை பகுதி யில் கடும் வறட்சி நிலவுகிறது. சிற்றாறு, கருப்பாநதி, அனுமன்நதி மற்றும் மாறாந்தை கால்வாய், மானூர் கால்வாய், வீராணம் கால்வாய்களும் தண்ணீரின்றி காய்ந்து கிடக்கின்றன. விவசாயிகள் லாரி தண் ணீரை நம்பி விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.

குற்றாலம் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் சிற்றாற்றின் கீழ் சுரண்டை, சுந்தரபாண்டியபுரம், கீழப்பாவூர், தாயார்தோப்பு, வீ.கே.புதூர் உள் ளிட்ட 300க்கும் மேற்பட்ட பாசன குளங்கள் உள்ளன.

இந்த குளங்களின் மூலம் இப்பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் பல்லாரி, வெங்காயம், மிளகாய், மல்லி இலை, கத்தரி, வெண்டை, தக்காளி, நிலக்கடலை மற் றும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் இப்பகுதி மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் சிற்றாறு விளங்குகிறது.

பருவமழை பொய்த்த தால் 6 மாதமாக சுரண்டை பகுதி வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கிறது. சிற்றாறும் வறண்டு காணப்படுகிறது. தொடர் வறட்சியால் சுரண்டை பெரியகுளம், இரட்டைகுளம், சாம்பவர்வடகரை வண்ணார்குளம், சுந்தரபாண்டியபுரம் பெரியகுளம், கம்பிளிகுளம், வீ.கே. புதூர் கோயில்குளம், அருந்தபிராட்டிகுளம், வீராணம் பெரியகுளம், வீரசிகாமணி பெரியகுளம், அரியநாயகிபுரம் குளம் உள்பட 300க்கும் மேற்பட்ட குளங்கள் தண் ணீர் இல்லாமல் காய்ந்து கிடக்கிறது. அதேபோல் 100க் கும் மேற்பட்ட கால்வாய் வசதியில்லாமல் மானாவாரி தண்ணீர் மூலம் நிரம்பக்கூடிய குளங்கள் உள்ளன. தற்போது நிலவி வரும் கடும் வறட்சியால் நிலத்தடி நீர் குறைந்து வர லாறு காணாத பஞ்சம் ஏற்பட்டுள்ளது. வயல்களில் விவசாயத்திற்கு பயன்படுத் தும் கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் கிணற்றை தூர்வாரி ஆழப்படுத்தும் பணி நடந்து வருகிறது.

விவசாயிகள் கடந்த முறை பல்லாரி, மிளகாய், தக் காளி, பருத்தி, கத்தரி, மல்லி, நிலக்கடலை ஆகியவை விவசாயம் செய்து நஷ்டம் அடைந்த நிலையில் கிணற்றை ஆழப்படுத்த ஆயிரக்கணக்கான பணத்தை செலவு செய்து விட்டு கண் ணீர் வடித்து கொண்டிருக்கின்றனர். ஏற்கனவே விவசாயிகள் தென்னை, மா, நெல்லி, எலு மிச்சை, வாழை, மாதுளை, ஆகிய மரங்களை காப்பாற்ற கடும் முயற்சி செய்து வருகின்றனர். லாரி, டிராக்டர், மினி டிராக்டர் வாகனங்களில் கொண்டு வரும் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி பைப் மூலம் மரங்க ளுக்கு

தண்ணீர் ஊற்றி காப் பாற்றி வருகின்றனர். லாரி நீருக்கு ரூ.800, டிராக்டருக்கு ரூ.600, மினி டிராக்டருக்கு ரூ.400 என விலைக்கு வாங்கி விவசாயம் செய்யும் நிலை நிலவி வருகிறது. விவசாயி கள் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

அடிமாட்டு விலைக்கு

கால்நடைகள் விற்பனை

புல், தண்ணீர் இல்லாததால் விவசாயிகள் கால்நடைகளை வளர்க்க முடியாமல் கேரளாவுக்கு குறைந்த விலைக்கு விற்கின்றனர். ஒரு சில பகுதிகளில் கால்நடைகளுக்கு சரியான உணவு கிடைக்காததால் அவை இறந்து விடுகின்றன.

## விவசாய மகளிர் குழுவினருக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஒருநாள் கருத்தரங்கு

கும்மிடிப்பூண்டி, : ஆரணியில் தமிழ்நாடு நீர்வள - நிலவள, ஆரணி ஆற்று நீரை பயன்படுத்துவோர் சங்கம் மற்றும் விவசாய மகளிர் குழுவினருக்கான ஒருநாள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று நடந்தது.

சுற்றுச்சூழல் இயக்குனர் பிரிதிவிராஜ், வேலூர் மாவட்ட எக்ஸ்னோரா தலைவர் தொல் காப்பியன், இயற்கை வேளாண்மை அமைப்பு தலைவர் புருசோத்தமன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் ஒழிப்பு, குப்பை சேகரித்து மறு சுழற்சி மூலம் உரம் தயாரிப்பது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்

கினர்.

மேலும் நீர்வள மேலாண்மை, இயற்கை வள மேலாண்மை, கால நிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம், குறைந்த அளவில் அதிக மகசூல் பெறுவது, செம்மை நெல் சாகுபடி குறித்து விளக்கினர்.

ஆரணி நகர திமுக செயலா ளர் கண்ணதா சன், முன்னாள் பேரூராட்சி கவுன்சிலர் கரிகாலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

10.10.2012 A.M

**தஞ்சை ஒரத்தநாட்டில்**
**ரூ.16 1/4 கோடியில் கால்நடை மருத்துவ கல்லூரி–ஆராய்ச்சி நிலையம்**
**ஜெயலலிதா திறந்து வைத்தார்**

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் அமைக்க பட்டுள்ள கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா நேற்று தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறி பில் கூற பட்டுள்ளதாவது:–

177 ஏக்கரில் கால்நடை மருத்துவக் கல்லூரி

சிறந்த கால்நடை மருத்துவர்கள் உருவாக்க பட்டால் தான் கால்நடைகளுக்கு தரமான மருத்துவ வசதியை அளிக்க இயலும் என்பதை கருத்தில் கொ டு, தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் ராமையன்பட்டியில் புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் மாவட்ட கால்நடை ப ணை வளாகத்தில் புதிய கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க தமிழக அரசு 177.92 ஏக்கர் நிலத்தை வழங்கி, கட்டமை பு வசதிகள் உள்ளிட்ட செலவினங்களுக்காக 16 கோடியே 34 லட்சம் ரூபாய் அளித்திட ஒ புதல் அளித்துள்ளது.

139 ஏக்கர் ஒதுக்கீடு

இந்த கல்லூரிக்கு முதல்வர் மற்றும் 38 ஆசிரியர்கள் நியமிக்க பட்டு, முதலாமா டு பட்ட படி பில் 40 மாணவ, மாணவிகள் சேர்க்க பட்டுள்ளனர். இந்த புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று (நேற்று) காணொலி காட்சி (வீடியோ கான்பரன்சிங்) மூலமாக தொடங்கி வைத்தார்.

திருநெல்வேலி மாவட்டம் ராமையன்பட்டியில் 139.21 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்ய பட்டு, கட்டமை பு வசதிகள் உள்ளிட்ட செலவினங்களுக்காக 12 கோடியே 59 லட்சம் ரூபாய் அனுமதித்து அரசு ஒ புதல் அளித்துள்ளது. இந்த கல்லூரிக்கு முதல்வர் மற்றும் 32 ஆசிரியர்கள் நியமி க்க பட்டு, 40 மாணவ, மாணவிகளுடன் முதலாமா டு வகு புகளை திருநெல்வேலி கால்நடை மருத்துவமனை வளாகத்தில் துவக்க அரசால் அனுமதி அளிக்க பட்டு வகு புகள் மற்றும் ஆய்வக வசதிகள் ஏற்படுத்த பட்டுள்ளன.

ஜெயலலிதா தொடங்கி வைத்தார்

இ புதிய கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா இன்று (நேற்று) தொடங்கி வைத்தார். முதல்–அமைச்சர் ஜெயலலிதாவால் வைக்க பட்டுள்ள இந்த கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், தமிழகம் முழுவதும் தேவை படும் தகுதி வாய்ந்த கால்நடை மருத்துவ பட்டதாரிகளை கூடுதலாக உருவாக்க உதவுவதோடு, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆடு வளர் பு உள்ளிட்ட கால்நடை வளர் பு சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட பெரிதும் பயன்படும்.

தமிழக அரசின் கால்நடை மேம்பாட்டிற்கான திட்ட பணிகள் சிற பாக நடைபெறவும், கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவச் சேவை அளித்திடவும், துறை அலுவலர்கள் மேம்பட்ட க காணி பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், 1 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவில் வாங்க பட்ட 29 புதிய ஜீ புகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வழங்கினார்.

56 பேர் நியமனம்

முதல்–அமைச்சர் ஜெயலலிதா தமிழக அரசின் மீன்வளத் திட்ட பணிகளை விரைந்து செயல்படுத்திடவும், மீன்பிடி துறைமுக பணிகளை செவ்வனே ஆய்வு செய்வதற்கும், மீனவக் கிராமங்களில் விரைந்த ஆய்வு பணிகள் மேற்கொள்ளவும் 1 கோடியே 14 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய 19 ஜீ புகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் 18 லட்சம் ரூபாய் செலவில் 2 நடமாடும் மீன் விற்பனை நிலையங்களுக்கான ஊர்திகள் மற்றும் மீன் வளத்துறை மூலம் 90 லட்சம் ரூபாய் செலவில் வாங்க பட்ட 11 நடமாடும் மீன் விற்பனை நிலையங்களுக்கான ஊர்திகள் என மொத்தம் 2 கோடியே 22 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் 32 புதிய ஊர்திகளை மீ ன்வளத்துறைக்கு வழங்கினார்கள்.

ஆவின் நிறுவனத்தில் பணியின் போது உயிரிழந்த ஊழியர்களின் 56 வாரிசுதாரர்களுக்கு கருணை அடி படையிலான பணி நியமன ஆணைகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வழங்கினார்.

இவ்வாறு அந்த செய்திக்குறி பில் கூற பட்டுள்ளது.

அடுக்குமாடி குடியிரு புகள்

கோவை மாவட்டம் சூலூரில் ரூ.2 கோடியே 57 லட்சம் செலவில் 3 அடுக்குகள் கொ ட 108 அடுக்குமாடி குடியிரு புகள் கட்ட பட்டு உள்ளன. இதேபோல், நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் 912 குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிரு புகள் ரூ.26 கோடியே 46 லட்சத்து 25 ஆயிரம் செலவில் கட்ட பட்டு உள்ளன.

இவற்றை ம், சேலம் நாலுகால் ம டபம் பகுதியில் ரூ.35 லட்சம் செலவில் கட்ட பட்டு உள்ள குடிசை பகுதி மாற்று வாரிய கோட்ட அலுவலகத்தை ம், விழு புரம் பெருந்திட்ட வளாகத்தில் கட்ட பட்டுள்ள 12 ‘பி’ வகை அரசு ஊழியர் வாடகை அடுக்குமாடி குடியிரு புகளை ம் முதல்–அமைச்சர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் திறந்துவைத்தார்.

**அந்தியூர் பகுதியில்**
**ரூ.66 லட்சத்தில் புதிய விளைபொருட்கள் சேமி பு கிடங்கு**
**எஸ்.எஸ்.ரமணீதரன் எம்.எல்.ஏ பணிகளை தொடங்கி வைத்தார்**

அந்தியூர் பகுதியில் ரூ.66 லட்சம் செலவில் புதிய விளைபொருட்கள் சேமி பு கிடங்குகள் கட்ட எஸ்.எஸ்.ரமணீதரன் எம்.எல்.ஏ. பணிகளை தொடங்கி வைத்தார்.

சேமி பு கிடங்கு

அந்தியூர், அம்மாபேட்டை பகுதி விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை சேமித்து வைக்க கிடங்கு வசதி செய்துகொடுக்க வே டும் என்று பல ஆ டுகளாக கோரிக்கை விடுத்து வந்தார்கள்.

இந்த கோரிக்கையை ஏற்று தமிழக அரசு அந்தியூர், கொ டையம்பாளையம், எ ணமங்களம், மாத்தூர், வெள்ளித்திரு பூர், முரளி உள்பட 6 இடங்களில் விளைபொருட்கள் சேமி பு கிடங்கு கட்ட நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.66 லட்சம் ஒதுக்கியது.

இதைத்தொடர்ந்து இதற்கான பணிகள் தொடக்க விழா நடைபெற்றது.

கடன் வசதி

எஸ்.எஸ்.ரமணீதரன் எம்.எல்.ஏ. விழாவில் கலந்துகொ டு பணிகளை தொடங்கி வைத்து பேசினார்.

அவர் பேசும்போது, 'மஞ்சள், மக்காச்சோளம், நெல், கொ பரை தேங்காய், நிலக்கடலை ஆகியவற்றை இந்த கிடங்குகளில் சேமித்து வைத்துக்கொள்ளலாம். மேலும் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு 50 சதவீதம் பொருளீட்டு கடனும் பெற்றுக்கொள்ளலாம்' என்றார்.

விழாவில், அந்தியூர் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் இ.செல்வராஜ், கூட்டுறவு சார்பதிவாளர் அலுவலக தனி அதிகாரிகள் ச முகம், முருகேசன், தியாகராஜ், மாவட்ட மாணவரணி மாவட்ட தலைவர் ச முகானந்தம், அந்தியூர் பேரூராட்சி தலைவர் மீனாட்சிசுந்தரம், அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் சரவணபவா, மாவட்ட கவுன்சிலர் சு பிரமணியம், ஒன்றிய கவுன்சிலர்கள் சு பிரமணியம், ராஜேந்திரன், பேரவை செயலாளர் செல்வம் ஊராட்சி தலைவர்கள் மாரிய பன், செம்பாமு பன் உள்பட கூட்டுறவு சங்கத்தினர் மற்றும் அ.தி.மு.க.வினர் திரளாக கலந்துகொ டார்கள்.

**கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு**
**ரூ.10 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்கவே டும்**
**விவசாயிகள் சங்கம் தீர்மானம்**

கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்கவே டும் என்று ஈரோடு மாவட்ட தமிழக விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்று உள்ளது.

சங்க கூட்டம்

ஈரோடு மாவட்ட தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட கூட்டம் ஈரோட்டில் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி தலைமை தாங்கினார். பொருளாளர் எம்.லட்சுமணன், ஏ.பி.வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்ற பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:–

ரூ.10 ஆயிரம் நஷ்ட ஈடு

கீழ்பவானி பாசன பகுதியில் முதலாம் ம டலத்திற்கு உரிய த ணீர் வழங்க படவில்லை. எனவே நிலுவையில் உள்ள பயிர்களும், கால்நடைகளும் பாதிக்க பட்டு உள்ளது. இதனை வேளா மை, கால்நடை வருவாய்த்துறை அதிகாரிகள் பரிசீலனை செய்து ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வே டும்.

மாநில அரசு முத்தர பு கூட்டம் கூட்டி உடனடியாக நடவடிக்கை எடுத்து நட பு அரவை பருவத்துக்கு கரும்புக்கு வயல்வெளி விலையாக ரூ.2 ஆயிரத்து 500 நிர்ணயிக்க வே டும்.

தடை செய்யவே டும்

உச்ச திமன்றம், ஐகோர்ட் தீர் புகளுக்கு முரணாக காவிரி, காலிங்கராயன் ர் நிலைகளில் சாய, தோல் ஆலைக்கழிவுகள் கல பதால் பெரிதும் மாசுபடுகிறது. இதை உடனடியாக அனைத்து துறை அதிகாரிகளும் க காணித்து சாய, தோல் ஆலைக்கழிவுகள் கல பதை தடை செய்யவே டும்.

மின்வினியோகத்தை சீராக முறை படுத்தி வழங்கவே டும். மின்தடையை முன் அறிவி புடன் மட்டுமே செயல்படுத்தவே டும்.

மேற்க ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்ற பட்டன.

**கீழ்பவானி பாசன பயிர்களுக்கு உடனடியாக உயிர் ர் விட வே டும்**
**பாசன விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை**

கீழ்பவானி பாசன பயிர்களுக்கு உடனடியாக உயிர் ர் விட வே டும் என்று பாசன விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

த ணீர் பற்றாக்குறை
கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் செ.நல்லசாமி வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இரு பதாவது:–

கீழ்பவானி பாசன பகுதிகளில் முழுவதும் குடித ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. தென்னை மரங்கள் காய்ந்து குருத்துகள் சா ம் நிலையில் உள்ளன. கடந்த செ டம்பர் மாதம் 17–ந் தேதி அரசு ஆணை படி த ணீர் திறக்க பட்டது.

I

உயிர் ர் வே டும்

அணையில் இருந்து ஒரு பகுதிக்கு 15 நாட்களும், மறு பகுதிக்கு 15 நாட்களும் என்று 30 நாட்கள் விடவே டும். ஆனால், ஒரு பகுதியில் உள்ள ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்துக்கு 8 நாட்கள் மட்டுமே த ணீர் திறக்க பட்டது. மறுபகுதிக்கு வருகிற 10–ந் தேதி த ணீர் விடவே டும். ஆனால், அணையில் போதிய த ணீர் இல்லை. எனவே பவானிசாகர் அணை ர் பிடி பு பகுதியில் உள்ள மின் அணைகளில் இருந்து த ணீர் திறந்து பாசனத்துக்கு விட வே டும். கீழ்பவானி பாசன பயிர்களுக்கு உடனடியாக உயிர் ர் விட்டு, பயிர்களை ம், கால்நடைகளை ம், விவசாயிகளை ம் கா பாற்ற வே டும்.

இவ்வாறு கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் செ.நல்லசாமி கூறி உள்ளார்.